# கீழக்கரை நகர்மன்ற 13.05.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள்: 1**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5, வார்டு எண்.14, வார்டு எண். 15, வார்டு எண். 16 மற்றும் வார்டு எண். 19 ஆகிய பகுதிகளில் பொதுமக்களால் தினசரி வீடுகளில் பயன்படுத்தப்படும் கழிவு நீர் PVC குழாய்கள் அமைத்து வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த PVC கழிவுநீர் குழாய்கள் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் செல்வதால் சுகாதாரகேடு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் சாலையினை பயன்படுத்துவதில் மிகவும் சிரமம் ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, மேற்காணும் பழுதுகளை உடனடியாக நீக்கம் செய்வதற்கு, PVC குழாய்கள், Man hole மற்றும் மூடிகள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இப்பணிக்கு ரூ.4,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி அல்லது குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.235/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு ரூ.4,00,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.727 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மீனவர் குப்பத்தில் பொது கழிப்பிடம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. அக்கழிப்பிடத்தில் அமைந்துள்ள திறந்தவெளி கிணறு பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் அங்கு சீரான நடைபாதை இல்லாத காரணத்தால் அப்பகுதி பொதுமக்களால் கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. ஆகவே பொதுகழிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி கிணற்றை பழுது நீக்கம் செய்யவும், அங்கு நடைபாதை அமைக்கவும் ரூ.3,50,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.236/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலனைக் கருத்தில் கொண்டு ரூ.3,50,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.728 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:3**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் வீட்டு கழிவு நீர் அனைத்தும் தட்டான் தோப்பு பகுதியில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மின் மோட்டார் மூலம் PVC குழாய்கள் பயன்படுத்தி கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது PVC குழாய்கள் தன்மை இழந்து ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதுடன் கழிவு நீரை வெளியேற்ற முடியாமல் துர்நாற்றம் வீசுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. இந்த PVC குழாய்கள் அமைத்து சுமார் 35 வருடங்கள் ஆகிய நிலையில் இந்த PVC குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. ஆகையால் இந்த PVC குழாய்களுக்கு பதிலாக D.I குழாய்கள் 150 mm மாற்றி அமைத்து உடைப்புகள் ஏற்படாமல் இருக்கும் வகையில் தட்டாந்தோப்பு பகுதியில் அமைந்துள்ள கழிவுநீரேற்ற நிலையத்திலிருந்து வடக்குத் தெரு பள்ளிவாசல் வரை 150 mm D.I K7 குழாய்கள் அமைக்க ரூ.8,00,000/—க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.237/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலனைக் கருத்தில் கொண்டு ரூ.8,00,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.729 அனுமதிக்கப்பட்டது.**

பொருள்: 4

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமம் காட்டுப்பள்ளியில் தங்கியிருக்கும் கேரளா மற்றும் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், உணவின்றி தவித்து வருவதால் கீழக்கரை நகர் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவு கட்டணங்கள் செலுத்தி மேற்கண்ட நபர்களுக்கு உணவுகள் தயார் செய்து வழங்குமாறு கீழக்கரை, நிஷா பவுன்டேசன் 24.03.2020 மற்றும் 31.03.2020–ந் தேதிய விண்ணப்பம் மற்றும் இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் ந.க.அ9/1963/2020, நாள். 11.04.2020ந்தேதிய உத்திரவின்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவுகள் தயார் செய்து வழங்குவதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி உள்ளூர் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்துமாறு, இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். சிவசங்கர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 25.03.2020 மற்றும் 01.04.2020 முதல் 30.04.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு ரூ.1,22,851/– மட்டும் வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | நாள் | தயார் செய்த உணவு வகை | | காய்கறிகள் வாங்கிய அளவு கிலோ/கிராம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | இட்லி சாம்பார் | சாதம் | | |
| 1. | 25.03.2020 | 800 | 320 | 30.5 | 1475 |
| 2. | 01.04.2020 | 1500 | 450 | 47.50 | 2415 |
| 3. | 02.04.2020 | 1600 | 450 | 47.50 | 2415 |
| 4. | 03.04.2020 | 1600 | 600 | 57.00 | 2665 |
| 5. | 04.04.2020 | 1600 | 600 | 57.00 | 2665 |
| 6. | 05.04.2020 | 1600 | 600 | 57.00 | 2665 |
| 7. | 06.04.2020 | 1600 | 600 | 57.00 | 2280 |
| 8. | 07.04.2020 | 1600 | 600 | 57.00 | 2665 |
| 9. | 08.04.2020 | 1600 | 600 | 57.00 | 2487 |
| 10. | 09.04.2020 | 1600 | 600 | 57.00 | 2280 |
| 11. | 10.04.2020 | 1600 | 600 | 57.00 | 2665 |
| 12. | 11.04.2020 | 1600 | 1200 | 95.50 | 4193 |
| 13. | 12.04.2020 | 1600 | 1200 | 95.50 | 4005 |
| 14. | 13.04.2020 | 1600 | 1200 | 95.50 | 4303 |
| 15. | 14.04.2020 | 1600 | 930 | 78.50 | 3248 |
| 16. | 15.04.2020 | 2000 | 1400 | 113.00 | 5018 |
| 17. | 16.04.2020 | 2000 | 1400 | 113.00 | 5150 |
| 18. | 17.04.2020 | 2400 | 1600 | 130.50 | 5418 |
| 19. | 18.04.2020 | 2400 | 1600 | 130.50 | 5958 |
| 20. | 19.04.2020 | 2400 | 800 | 80.50 | 3515 |
| 21. | 20.04.2020 | 2400 | 1600 | 130.50 | 5825 |
| 22. | 21.04.2020 | 2400 | 1500 | 124.50 | 5311 |
| 23. | 22.04.2020 | 2400 | 1400 | 118.10 | 5400 |
| 24. | 23.04.2020 | 2400 | 800 | 80.50 | 3715 |
| 25. | 24.04.2020 | 2400 | 800 | 80.50 | 3775 |
| 26. | 25.04.2020 | 2400 | 800 | 80.50 | 3530 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27. | 26.04.2020 | 2400 | 1600 | 130.50 | 5810 |
| 28. | 27.04.2020 | 2400 | 1600 | 130.50 | 6305 |
| 29. | 28.04.2020 | 2400 | 1400 | 118.00 | 5360 |
| 30. | 29.04.2020 | 2400 | 1500 | 124.50 | 5310 |
| 31. | 30.04.2020 | 2400 | 1300 | 111.50 | 5025 |
| மொத்தம் | | 60700 | 31650 | 2743.6 | 122851 |

மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.122851/– மட்டும் இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 25.03.2020 மற்றும் 01.04.2020 முதல் 30.04.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி வாங்கி கொடுத்த வகைக்கு அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு ரூ.1,22,851/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.730 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 5</u>**

கீழக்கரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் இந்நகராட்சியின் மூலம் அம்மா உணவகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா உணவக கட்டிடத்தின் மேற்கூரை சேதமடைந்து தற்போது கீழே விழுந்த நிலையில் உள்ளது. மேலும் வெளிப்புறங்களில் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் சட்ட விரோத செயல்களில் சிலர் ஈடுபடுகின்றனர். எனவே மேற்கூரையை சரி செய்யயவும், வெளிப்புறத்தில் பாதுகாப்பு வசதி ஏற்படுத்தவும் ரூ.2,95,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.234/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இந்நகராட்சி அம்மா உணவக பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ரூ.2,95,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.731 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/—ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**